# அமிர்தா பல்கலை.பட்டமளிப்பு விழா



**கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 13-ஆவது பட்டமளிப்பு விழாவில், மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் பல்கலைக்கழகத் தலைவர் சுவாமி அமிர்தஸ்வரூபானந்தா.**

**கோவை, ஆக. 23:** கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 4,477 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 2,212 மாணவிகள் உள்பட 4,477 மாணவர்கள் பட்டம் பெற்றனர். இவர்களில் 36 பேர் முனைவர் பட்டம் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் செயலாளர் அஷுதோஷ் சர்மா பேசியதாவது:

இந்தியாவில் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். வன்முறை அதிகரித்து வரும் உலகில் மாணவர்கள் மாற்றத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

தொழில்திறன் உருவாக்குதல் மற்றும் கற்பித்தல் முனைப்பு செலுத்தும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையில் பல்கலைக்கழகங்கள் உருவாக வேண்டும் என்றார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தின் தலைவர் சுவாமி அமிர்தஸ்வரூபானந்தா பூரி, மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.